## 85. கல்வாரியின் நாதா

### பல்லவி

கல்வாரியின் நாதா
எனக்காக சிலுவை மரத்தை
சுமந்த தேவனே – 2

### சரணங்கள்

1. காட்டி கொடுத்தேன் யூதாசைப்போல
பொருளாசையினால் அடிமைப்பட்டேன்
உலகத்தின் செல்வத்திற்காய்
உம்மை காட்டி கொடுத்தேன்
- கல்வாரியின்

2. சீஷர் எல்லா உம்மை விட்டு
எல்லோரும் ஓடி போனார்களே
நானும் உம்மை விட்டு
இந்த உலகத்தின் பின்னே ஓடினேன்
- கல்வாரியின்

3. பேதுரு சீஷன் போலவே
மறுதலித்த பாவி நான் ஐயா
எந்தன் உயிரை காத்துகொள்ள்
உம்மை மறுதலித்தேன்
- கல்வாரியின்